# ஆறுமுகநாவலர் கவித்திரட்டு



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

# ஆறுமுகநாவலர் கவித்திரட்டு

இந்து சமய அறநெறிக் கல்விப்பிரிவு
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

# வெளியீட்டுரை

சைவமும், தமிழும், புத்துயிர்பெறுவதற்கு தம்மால் இயன்ற அத்தனை பணிகளையும் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் விட்டுச்சென்ற நூற்பொக்கிஷங்களில் கிடைத்தற்கரிய சொத்தாகிய "ஆறுமுகநாவலர் கவித்திரட்டினை" இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டில் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1914 ஆம் ஆண்டு முதன்முதலில் ஒரு சிறிய நூலாக வெளிவந்த இந்நூல், 1972 இல் இரண்டாம் பதிப்பாக "ஆறுமுகநாவலர் கவித்திரட்டு" என்ற பெயரில் மீண்டும் வெளிவந்தது. உரைநடையை நவீனத்துவ மாற்றங்களுடன் பயன்படுத்திய நாவலர் செய்யுள் நடையை தம்காலத்து மரபுச்செய்யுட் பாணியிலேயே எவ்வித மாற்றமும் இல்லாமல் கையாண்டுள்ளார். கடவுள்மீதும், கோவில்கள்மீதும் பாடப்பட்ட செய்யுட்கள், கீர்த்தனைகள் இராகத்தோடு பாடக்கூடியனவாக விளங்குகின்றன. இவற்றைச் சிலர் பக்தியுணர்ச்சியோடு ஓதி நோய் நீங்கப்பெற்ற வரலாறும் உண்டு.

பெரிதும் மானுடரைப் பாடாத நாவலர் தமது குரு சரவணமுத்துப்புலவர் மற்றும் தமது மாணாக்கர் வி. சுப்பிரமணியப்பிள்ளை ஆகியோர் மீது மட்டும் "சரம" கவிதைகள் பாடியுள்ளார். இந்நூலிலுள்ள அனைத்துப்பாக்கள் ஊடாகவும் நாவலரின் கவித்துவ உள்ளத்தினைக் காணகூடியதாக உள்ளது.

இந்து சமயம், வரலாறு, கலை ஆகிய துறைகளைப் பாடமாகப் பயிலும் உயர்பிரிவு மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், நாவலர்மீது பற்றுக்கொண்டவர்களுக்கும், சைவசமய ஆர்வலர் களுக்கும் இந்து சமயஅறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இவ் மீள்பதிப்பு பயன்தருவதாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

**அ. உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

# முகவுரை

செயற்கரிய பற்பல நூல்களைச் செய்து பெரும்புகழ் படைத்த ஆறுமுகநாவலர் அவர்கள் இயற்றிய தனிப்பாக்களைக் கொக்குவில் வாசரும், கொழும்பு மீனாம்பாள் அச்சியந்திரசாலை அதிபருமாயிருந்த சி. செல்லையாபிள்ளை அவர்கள் தொகுத்து, 1914ம் ஆண்டு அச்சிட்டு ஒரு சிறு நூலாக வெளிப்படுத்தினர். அந்நூல் இப்போது கிடைத்தல் அரிது. அந்நூலின் கண்ணுள்ள பாக்களோடு புதிதாகக் கிடைத்த ஒரு பாவையும் சேர்த்து "ஆறுமுகநாவலர் கவித்திரட்டு" என்னும் பெயரோடு இந்நூல் இப்போது எம்மால் அவரது பிறந்த நூற்றைம்பதாம் ஆண்டு மலராக வெளியிடப்படுகிறது.

இக் கவித்திரட்டில் வரும் பாக்கள் யாவும் சொற்சுவை பொருட்சுவை நிறைந்து நாவலரது வடமொழி தென்மொழிப் பெருநூலுணர்ச்சியையும் பேரறிவின் மாட்சியையும் நன்கு புலப்படுத்துகின்றன. நாவலர் கீர்த்தனங்கள் பாடுவதில் மிகவும் திறமை படைத்தவர் என்பதனை அவர் கதிர்காம சுவாமி பேரிற் பாடிய ஆறு கீர்த்தனங்களும் காட்டும். அவை அற்புதமான பக்திப் பாடல்களாக மிளிர்கின்றன. அவருடைய பாடல்களுள் அனைத்தழகும் பொருந்தியது அவருடைய பாடசாலை ஆசிரியருள் ஒருவராகிய வி. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் மீது பாடப்பட்ட இரங்கற் பாக்கள் ஓசையும் உணர்ச்சியும் ததும்பும் இப்பாடல்களில் நாவலருடைய கவித்துவம் கரை புரண்டு ஓடுவதைக் காணலாம்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த இந்நூலை வெளியிடுவதற்குப் பேருபகாரியாய் இருந்தவர் எமது நண்பரும், மலாய் நாட்டு இளைப்பாறிய உத்தியோகத்தருமாகிய கொல்லன்கலட்டி உயர்திரு.ந.பொ.செ. இலங்கை நாயகம் அவர்கள். அவருக்கு எமது நன்றி உரியதாகுக.

புலவரகம் — சுன்னாகம்

10.07.72 — **கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை**

# ஆறுமுகநாவலர் கவித்திரட்டு

## விநாயக வணக்கம்

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தின்
அரும் பொருளைச் சிவனார் தந்த
பேர்பூத்த நிருமலசின் மயவடிவை
ஆனந்தப் பெருக்கை என்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
கவர்வணங்குங் கருணை வாழ்வைப்
பார்பூத்த அடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம்.

## அராலிச் சித்திவிநாயகர் துதி

**1856**

சீரேறு கருணையுரு வாயவிசு வேசனொடு
திகழ்விசா லாட்சி தந்த
செல்வமே! அடியவர்க ளினிதுண்ண வுண்ணத்
தெவிட்டாத தெள்ள முதமே!
பேரேறு மறிவிச்சை தொழிலென்ற மதமூன்று
பெருகுமா னந்த வடிவே!
பிரணவப் பொருளே! யென்னு றவே! யென் னுள்ளமே!
பேசுமிரு கண்ணின் மணியே!
காரேறு நெடுமாலொ டயன்முத லியாவருங்
காணரிய நினதி ரண்டு
கழல்பணிந் திடின்மகப் பேறுமுத லியாவையுங்
கைகூட் டலரி தாகுமோ?
வாரேறு களபபரி மளமருவு முபயமுலை
வலவையுள மகிழ்கொ முநனே!
வண்டுமது உண்டுலவு தண்டலை அராலிநகர்
வாழ்சித்தி வேழ முகனே!

# நல்லைக் கைலாசபிள்ளையார் மீது
# மங்கள விருத்தம்

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொரூப

செகதீச! திருமங் களம்,

தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த

திகழீச! திருமங் களம்,

பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப்

பிரகாச! திருமங் களம்,

பிறைநுதலொ டயில்விழிகொள் வலைவையெனு மிரிவையிற்

பெருநேச! திருமங் களம்,

ஊர்கொண்ட பரிதிமணி யெனவிலகு முதரமதி

ஒளிர்தேச! திருமங் களம்,

ஒருவெண்ணை நல்லையமர் மெய்கண்ட தேசிகற்(கு)

உபதேச! திருமங் களம்,

கார்கொண்ட கரடதட கயமுகவ அங்குசக்

கரராச! திருமங் களம்,

கருணேச நல்லையங் கைலாச புரிவாச

கவினேறு கணரா சனே!

# சிதம்பரம் நடராசப்பெருமான் துதி

மணிகொண்ட கடல்புடைகொ ளிந்நாட்டில் உன்சமய
வர்த்தனமி லாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதியிம்
மைபொருட் பேறொ ழித்தே
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயும் இடர்கள் கண்டும்
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
கருதுவோ ரின்மை கண்டும்

அணிகொண்ட சாலைய தொழிப்பினஃ துணையிகழும்
அன்னிய மதத்தர் சாலை
ஆமென நினைந்தனெஞ் சற்பகற் றுயருறல்
அறிந்துமொரு சிறிதும் அருளாத்
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யான் உயிர்விடுதல்
திண்ணநீ அறியா ததோ
சிறியேன தன்பிலர்ச் சனைகொள்ளழ கியதிருச்
சிற்றம் பலத்தெந் தையே.

# அராலி விசுவநாதசுவாமி துதி

**1856**

உலகெலா மாகிவே றாயுடனு மாய்நின்ற
உண்மையறி வின்ப வடிவே!
ஓங்குமீ சானாதி சத்திபஞ் சகமேமெய்
உருவெனக் கொண்ட முதலே!
அலகிலா முற்றறிவு முதலறு குணங்களா(று)
அங்கமென உடைய பரனே!
அவனிமுதன் மூர்த்தமெட் டுடையனாய்ச் சர்வாதி
அட்டநா மங்கொள் சிவனே!
இலகுசீ ரைந்தொழி லுஞற்றியு முஞற்றிலா(து)
இனிதுதிகழ் கின்ற பதியே!
எண்ணத் தெவிட்டாத தெள்ளமுத மே! யடியர்
இடர்போக்கு சேம நிதியே!
விலகலா துன்னைவழி பாடுசெயு மன்பர்க்கு
வேண்டுவ கொடுத்த ருளுவாய் !
விண்டல மளாவிவளர் தண்டலை அராலிநகர்
விசுவநா தக்கட வுளே!

# அராலிச் விசாலாட்சியம்மை துதி

**1856**

பொன்பூத்த இமயப் பொருப்புதவு புதல்வியே!

போதவா னந்த வடிவே!

பொலியுமெண் ணான்கறம் வளர்த்தருளும் அன்னையே!

போக்குவர வற்ற பொருளே!

கொன்பூத்த அயில்வேற் குமரனைத் தந்தநிற்

குணனிடப் பாலம் மையே!

குலவுபரை யாதியைஞ் சத்திவடி வாய்நின்ற

கோதில் கருணா வாரியே!

மின்பூத்த கொடியிடைகொள் சலைசைகலை மகள்பணியு

மேன்மை யுறுமா தேவியே!

மிக்கபா மாலைசாத் திடுமடியர் வேண்டுவன

வேண்டியாங் குதவு நிதியே!

தென்பூத்த நினதுபத மலரிறைஞ் சிடுமடியர்

சிந்தித்த வரமருள் செய்வாய் !

செங்கமல மலர்வாவி தங்கிடும் அராலிநகர்

திகள்விசா லாட்சி உமையே!

# நல்லைக் கந்தசுவாமி வாழி விருத்தம்

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதனம்

ஆறுமநு தினமும் வாழி.

அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ

அருண்முருகர் சரணம் வாழி.

கருணைமழை பொழிபனிரு நயனமதி னொடுவலிய

கவினுலவு தோள்கள் வாழி.

கனகிரியை இருபிளவு படவுருவு நெடியவயில்

கரதலத் தினிது வாழி.

வருணமர கதவழகு திகழவரும் அவுணனெனும்

மயிலினொடு சேவல் வாழி.

வனசரர்தம் அரசனுத வியகுறமி னொடுகடவுள்

மயிலிவர்கள் தினமும் வாழி.

தருணமிது எனவமரர் பணிநல்லை அமர்கந்தர்

தமதடியர் நிதமும் வாழி.

சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண

சடட்சரம் வாழி வாழி.

# புலோலி பசுபதீசுரர் திருவூஞ்சல்

## விநாயகர் காப்பு

சீர்பூத்த மலரயன்மா லிமையோர் போற்றுந்
திறம்பூத்த புலோலியில்வாழ் சிவனார் கொன்றைத்
தார்பூத்த சடையர்பசு பதியார் மீது
தமிழ்பூத்த ஊஞ்சலிசை தமியேன் பாட
ஏர்பூத்த மறைமுதலி னிலகுந் தெய்வம்
இயல்பூத்த பிரணவமா யினிது மேவுங்
கார்பூத்த கரடதட விகட கும்பக்
கயமுகவ னிருசரணங் காப்ப தாமே.

## நூல்

நலமோங்கு நாதவிந்து கால்க ளாக,
நயனோங்கு சத்தியொளிர் விட்ட மாக,
நிலமோங்கு மந்திரநூ லிழைய தாக,
நிகமோங்கு மறைநான்குங் கயிற தாகப்
பலமோங்கு முபநிடதம் பலகை யாகப்
பரமோங்கும் பிரணவம்பொற் பீட மாகப்
புலமோங்கு கலைவாணர் புகழ்ந்து பாடும்
புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

காமருவு மிமையவர்பொன் மலர்கள் வீழக்
கணமருவும் பூதரிரு மருங்குஞ் சூழ,
மாமருவு மருமனயன் முதலோர் தாழ,
வரமருவு மருளடியர் மலங்கள் போழத்
தேமருவு தரிசனத்தின் மனஞ்சென் றாழத்
திடமருவு சிற்சுகம்பெற் றினிது வாழப்
பூமருவு மளியிசைகொள் பொழில்கள் சூழும்
புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

கணந்திகழுங் கின்னரர்கள் சுருதி கூடக்
கவின்றிகழு மலர்ப்பிரமன் தாளம் போட,
இனந்திகழு மரமகளிர் நடன மாட,
இசைதிகழுந் தும்புருநா ரதர்பண் பாட,
மனந்திகழு மன்பர்பெறு மிடர்க ளோட,
மறைதிகழும் பேரொலியெத் திசையு நீடப்
புனந்திகழும் வள்ளிமண வாளர் போற்றும்
புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

வரஞ்சிறக்குந் திருத்தொண்ட ரன்பு கூர
மலர்சிறக்குங் கரங்கள்சிர மீது சேரத்
திரஞ்சிறக்கு மானந்த வருவி சோரச்
சிவஞ்சிறக்கும் பெருஞானந் திகழ்ந்து சாரப்
பரஞ்சிறக்கும் பருவதவர்த் தனிபங் காரப்
பரஞ்சிறக்கும் பாடல்கவி வாணர் தேரப்
புறஞ்சிறக்கு மியாழ்ப்பாண மதனி லோங்கும்
புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

மின்னியலுஞ் சடிலநதி மாது வீற,

மிசையியலு முடிமீது மலர்க ளேறக்

கொன்னியலும் படகமொடு துடிவிண் பீறக்

குணமியலு முனிவரர்வாழ்த் தொலிகள் கூறத்

தென்னியலுங் களபசுகந் தாதி நாறச்

செயலியலுஞ் சிறியனிரு வினைகள் பாறப்

பொன்னியலு மமருலகும் பொருவ மேவும்

புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

சடைவிளங்குங் கடுக்கைநிலா மதிய மாடத்

தாள்விளங்குஞ் சிலம்புகலின் கலினென் றாட.

இடைவிளங்கு மணியரவக் கச்சு மாட.

எழில்விளங்குஞ் சூலமெழு மான்கை யாட.

உடைவிளங்குங் கொலைப்புலியி னதளு மாட.

உரம்விளங்கு மெஞ்ஞோப வீத மாடப்

புடைவிளங்கு நவமணிமா டங்க ளோங்கும்

புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

கயலுலவு விழியுமையம் பிகையா ணேச!

கவினுலவு மிரசதகை லாச வாச!

மயலுலவு மலமாதி பாச நாச!

மதியுலவு மடியருள மாவி லாச!

அயலுலவுந் திருநந்தி தொழுமுல் லாச!

அருளுலவுங் கணேசனைத்தந் தருளுந் தேச !

புயலுலவுஞ் சிகரவணி பொலிந்து மேவும்

புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

காதமருங் குழையவரே! ஆடீ ரூஞ்சல்,
கரத்தமரு முழையவரே! ஆடீ ரூஞ்சல்,
சீதமரு மதலையரே! ஆடீ ரூஞ்சல்,
சிலையமரும் பதலையரே! ஆடீ ரூஞ்சல்,
சேதமரு மிறையவரே! ஆடீ ரூஞ்சல்,
திடமருவு மறையவரே! ஆடீ ரூஞ்சல்,
போதமருந் தடங்கள்பல புடைசூழ் கின்ற
புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

அறமிலங்குந் தயாநிதியே! ஆடீ ரூஞ்சல்,
அருளிலங்கும் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்,
நிறமிலங்குஞ் செய்யவரே! ஆடீ ரூஞ்சல்,
நிலைவிலங்குந் துய்யவரே! ஆடீ ரூஞ்சல்,
மறமிலங்கும் படையவரே! ஆடீ ரூஞ்சல்,
மதியிலங்குஞ் சடையவரே! ஆடீ ரூஞ்சல்,
புறமிலங்குங் கடலலைபன் மணிகள் வீசும்
புலோலிநகர்ப் பசுபதியே! ஆடீ ரூஞ்சல்.

அற்பாருந் திருவருளைந் தெழுத்து வாழி,
அணியாரு மக்கமணி பூதி வாழி,
வற்பாரு மறையுடனா கமங்கள் வாழி,
மகிழ்வாருஞ் சைவமத சபையார் வாழி,
கற்பாரும் மகளிர்பசு வினங்கள் வாழி,
கவினாரு மரசர்முகில் மறையோர் வாழி,
பொற்பாரும் பருவதவர்த் தனியார் வாழி,
புலோலிநகர்ப் பசுபதியார் வாழி, வாழி.

# அரிமழம் சுந்தரேசர் மீனாட்சி துதி

திருக்கிளர் கமலத் தயன்மத லமரர்
திகழ்மறை முனிவரேத் தெடுப்ப
மருக்கிளர் சோலை யரிமழ நகர்வாழ்
வரதனே! மறைமுடி விளங்குங்
குருக்கிளர் மணியே! அன்பர்தம் அகத்துக்
குலவிய தீபமே! அடியேன்
கருக்கிளர் பிறவி நோயொழித் தருள்வாய் !
கடவுளே! கருணைவா ரிதியே!

மெய்யறி வின்ப வடிவமே! நெடுமால்
விரிஞ்சனா டரும்பரஞ் சுடரே!
மொய்குழற் கயற்கட் கொடியொரு மருங்கு
முளைத்தெழு முதியமா மருந்தே!
தெய்வத மறையோர் தினந்துதித் திறைஞ்சத்
திகழரி மழமுறை சிவனே!
உய்யநன் னெறிநா யேற்கினி தருளாய் !
ஒருவனே! உலகநா யகனே!

அவனவ ளதுவென் றுரைத்திடு முலகம்
ஆகிவே றாயுள னாகுஞ்
சிவபெரு மானே! படைத்தலா தியவைந்
திறத்தொழி லுயிர்ப்பொருட் டுஞற்ற
நவவடி வெடுத்த அருட்பெருங் கடலே!
நவிறரும் அரிமழ நகர்வாழ்
பவனெனுஞ் சொக்க நாதனே! எனக்குப்
பற்றுநின் பதமலா திலையே.

அங்கியின் சத்தி ஒன்றதே எனினும்

அடுதலா தியபல தொழிலாற்

பொங்குபல் திறத்த தாகல்போற் பதிக்குப்

பொருந்துமோர் சத்திநீ யெனினும்

தங்கிய பரையே! முதலைவைந் தானோர்

சகம்புகழ் அரிமழ நகர்வாழ்

அங்கயற் கண்ணி அம்மையே! உன்தன்

அடித்துணை ஆருயிர்த் துணையே!

# கதிர்காமசுவாமி மீது கீர்த்தனங்கள்

## 1

இராகம் - சாவேரி தாளம் - ஆதி

### பல்லவி

உன்னிரு பாததெரிசனஞ் - செய்த பின்னரே
உவகைக் கடலுள் - ஆழ்ந்தேனே.

### அநுபல்லவி

தன்னிகரிற் கதிரை - தனில்வாழும் போதனே!
சற்குணய பரிபூரண - சண்முக நாதனே! (உன்)

### சரணங்கள்

ஆதி நடுவிறுதி நீங்கினோய்! - சித்தோ(டு)
அசித்தாம் பிரபஞ்ச முற்றுந் - தாங்கினோய்!
சோதிவடி வாய்நின்ற சூலபாணி புதல்வா!
சூரனாதி மூவரைத் தொலைத்தருளும் முதல்வா! (உன்)

சனன மரணத்துயரத் தாழ்கின்றேன் - இன்னுஞ்
சஞ்சல சாகரத்துள் வீழ்கின்றேன்
இன்னமும் பராமுகஞ் செய்யாதெனக் குருகுவாய்
ஏதிலாத முத்தியின்பந் தருகுவாய். (உன்)

அருளுங் கருணைக் கடலல்லையோ? - முன்னர்
அமரரிடர் அகற்ற வில்லையோ?
ஒருவிலெனது நோயை ஓட்டுதல் அருமையா?
உனையேநம்பி வந்தேனுக் குருகாமை பெருமையா? (உன்)

## 2

இராகம் - துசாவந்தி                                        தாளம் - சாபு

### பல்லவி

ஏனிந்தக் கேடு நெஞ்சே! ஐயையோ!- உனக்(கு)
ஏனிந்தக் கேடு நெஞ்சே!

### அநுபல்லவி

மோனந் திகழுஞ்சைவ - முனிவருறை கதிரை
முருகா! முருகா! முருகா! வென்றுருகிலை                (ஏனிந்த)

### சரணங்கள்

பொய்யா முலகவாழ்வை நீங்கி - நித்திய
பூர ணானந்த வாழ்விற் றேங்கி
மெய்யாம் அறிவானந்த வேதமுடி வாய்நின்ற
விமலா! விமலா! விமலா! என்றுருகிலை                (ஏனிந்த)

சனன மரணத் துயர்தீரு - மது
தானா யமருநிலை சாரும்
கனகசபை நடனக் கருணாகரன் முன்றந்த
கந்தா! கந்தா! கந்தா! வென் றுருகிலை                (ஏனிந்த)

அங்கியிடை மெழுக தென்னக் - கசிந்(து)
அளவிலா னந்தமிகத் துன்ன
கொங்குகமழ் கடம்பு குல்லையொடு புனைந்த
குகனே! குகனே! குகனே! யென் றுருகிலை                (ஏனிந்த)

## 3

இராகம் - சுருட்டி                                        தாளம் - ஆதி

### பல்லவி

நிருமல பரசிவ சண்முகா! - சுத்த
நித்திய சத்திய வித்தக னாங்குக!

### அநுபல்லவி

திருவு லாவு மிலங்கையின் மேவிய
சீர்திக ழுங்கதிர் காமத் துறைதரு
சிற்ப ரா! அருள் தற்பரா! அன்பர்
சிந்தை யுகந்தம ருந்தனி வேலனே! (நிரு)

### சரணங்கள்

பரமனருளும் புதல்வா! -பரமா னந்தசிவ
பக்தர்க் கருளும் முதல்வா!
கருணை சேர்சச்சி தானந்த வடிவே!
கணிப்பிலாச் சதுமறையின் முடிவே!
கந்த னே! உமை மைந்தனே! என்னைக்
காத்து மலவிருள் தீர்த்தினி தாளுவாய் (நிரு)

அறிவுக் கறிவாய் நின்றவா! - கிரௌஞ்ச கிரியுடன்
அவுணர் கிளையைக் கொன்றவா!
குறிகுணம் இறந்திலகு முருகா!
கூர்ந்து ளாயணி மருமன் மருகா!
கோல னே! புரி நூலனே! ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே இன்பருள் (நிரு)

அயனைச்சிறையில் வைத்தவா!-அகத்திய முனிவனுக்(கு)

அருளோ டுபதே சித்தவா!

வியனுல கமர ருக்கருள் தாளா!

இன்னுதல் வள்ளிக் கொடிபுணருந் தோளா!

மெய்யனே! எமதையனே! - அர

விந்த மலர்நிக ரும்பாதந் தந்தருள் (நிரு)

## 4

இராகம் - ஆகிரி தாளம் - சாபு

### பல்லவி

இத்தனை கொடுவே தனைப்படல் கண்டுமுமக்(கு)

இன்னும் இரக்கம் இல்லையா!

### அநுபல்லவி

சித்திமுத் திகடருந் தெய்வமா ணிக்கநதி

சேருங்கதிரை நகர்திகழ் சுப்பிரமணி யரே!நான் (இத்தனை)

### சரணங்கள்

அண்டர் இடர கற்றும் போதரே! அன்பர்

அனவரதம் பணிபொற் பாதரே!

கண்டங் கரியசோதி காதலரே! எனது

கண்ணே!யென் கண்மணியே! காருண்ய சாகரமே! (இத்தனை)

எள்ளினெய் போலெங்கும் நிறைவீரே! உமக்(கு)

என்றுயர் தெரியாதோ? அறைவீரே

தெள்ளுந்தமி ழால்வைதார் தமக்குமருள் வீரென்று

தீதில்அருணகிரி தேவர்சொல் நம்பி வந்தேன் (இத்தனை)

உம்மையல் லாதுதுணை அறியேனே - துயர்

ஒட்டிலீ ரேனு மும்மைப் பிரியேனே

இம்மை மறுமை வீடுமூன்றும் உம்மாலே யாகும்

இதுவே சத்தியஞ் சத்தியமென்று துணிந்துவந்தேன்

(இத்தனை)

## 5

இராகம் - கல்யாணி தாளம் - ரூபகம்

### பல்லவி

என்மேலிரக்க மில்லையா? சாமி! - புதல்வனுக்குத் தந்தை

இரங்கா திருந்தா லென்சொல்லும் பூமி.

### அநுபல்லவி

தன்னிக ரில்லாக் கதிரைமலை வாழும்

தற்பரா னந்த சாமி சுகாரம்ப

உன்னுபய சரணாம் புயமல் லாமல்

ஒன்றும் புகலிட மின்றினி யாகுதல் (என்)

### சரணங்கள்

துய்ய சடட்சரத் தோரெ முத்தையுஞ்

சொல்லி லேன்என் செய்வேன் சிறியேன்

கோடிசூரியப் பிரகாச மானவரோ தயசுவாமி!

உய்வகையறியேன் செய்யநின் னாமத்தை நினையேன்

பவந்தீ ராதுலை கின்றேன் வினையேன்

அன்னை தெய் வமுநீயே! அடியேனுக்குய் வருள்வாயே!

அருள்சேர் சீலா! பாலா! கோலா!

நல்லனுகூலா! செங்கதிர் வேலா! இன்னும் (என்)

நித்திய பரிபூ ரணானந்த நிருமலா

தீதமுருகா! பாம்பில் நிருத்தம் புரியும்

பரந்தா மனுக்குநிக ரில்லாத நன்மருகா!

துத்திய வள்ளி மணாளா! பலதொண்டர் வணங்கிடுதாளா!

என்மேற் சூதை எண்ணாதே

என்னை யிந்த வாதை பண்ணாதே,

கனமிகு துய்யா! மெய்யா! பொய்யா!

பன்னிருகையா! அய்யா! செய்யா! இன்னும் (என்)

ஆறு முக!வென் றழைக்குங் கீரனுக்(கு)

அருள்பு ரிந்திடு முதல்வா!

அனவரதமுந் துதிசெயுந்திரி யம்பகற்கொரு புதல்வா!

சீறுமவுணனை வென்றாய் ! குறத்தேவிமுன் வேங்கையாய் நின்றாய்

நின்மேற் சிந்தனை வையே,

ஒருக்காலும் வந்தனை செய்யேன்,

கனஃழ தேசா! ராசா! விலாசா!

நல்லையில் வாசா! நேசா! ஈசா! இன்னும் (என்)

## 6

இராகம் - அசாவேரி　　　　　　　　　　　　　　தாளம் - ஆதி

### பல்லவி

சிவகுரு நாதருக்கு செயமங்களம் - நல்ல
செங்கமலப் பாத ருக்குச் செயமங்களம்

### அநுபல்லவி

பவமறுத் தெனையாளும் பன்னிரு தோளருக்கு
தவமுனி வர்களுளந் தங்கரு ளாளருக்குச் (சிவ)

### சரணங்கள்

கன்னிவள்ளி நேசர்பாவ நாசருக்கு மங்களம்,
கதிர்காம வேலரீழ தேசருக்கு மங்களம்,
மன்னுமடி யார்க்கருளு மாசில்கும ரேசருக்கு
துன்னிய அனந்தகோடி சூரியப்பிர காசருக்கு (சிவ)

மங்கையுமை பாலர்வடி வேலருக்கு மங்களம்,
மன்னுமறை நூலரனு கூலருக்கு மங்களம்,
புங்கமிகு சிவகாம போதக சுசீலருக்குச்
செங்கையில் விளங்குவளைத் தெய்வயானை லோலருக்குச் (சிவ)

சங்கரன்குமா ரர்குல்லைத் தாரருக்கு மங்களம்,
தன்னிகரில் லாதநல் லூரருக்கு மங்களம்,
பொங்குசினத் தவுணரைப்போ ரில்வென்ற வீரருக்குத்
துங்கவகத் தியற்கருள் தோமிலதி தீரருக்குச் (சிவ)

# ‘சனி நீராடு’ என்னும் முதுமொழி உரையைப் பற்றிக் கூறிய

## சீட்டுக்கவி

மக்கர்குகு தத்தர்நிட தத்தர்பிற மன்னர்தொழ
வளமிகுதொன் மதுரை நீங்கி
மத்தகய மொத்ததிறல் பெற்றிடு புவிச்சக்ர
வர்த்திசிங் காரி யன்முதல்
மன்னரர சாளுமிட மென்னவள ரியாழ்ப்பாண
மருவு நல்லா புரியினன்
மயில்வா கனச்சுப்ர மணியசுவா மியின்றிரு
மலரடி துதிக்கு மடிமை
திக்கனைத் தும்புகழு முத்தம மிகுத்திடுஞ்
செந்த மிழ்க்கலை ஞாபகன்,
சீர்மருவு கந்தனருள் மைந்தனா மாறுமுக
தீரன் எழுதுங் காகிதம்,

செப்புதய தாரகைப் பத்திரமச் சிற்பதித்
திட்டுப்ர சித்தி செய்யும்
திகழ்முகா மைக்கார ரெதிர்கொண்டு துயர்விண்டு
சித்தமகிழ் கொண்டு காண்க.

தக்கசனி நீரா டெனுமவ்வை யார்மொழி

தனக்கு ரைதனைப் பகரிடிற்

சனிவார மதிலெண்ணெ யிட்டுவெந் நீரினிற்

தலைமுழுக வென்ப தாகுஞ்

சத்திய விசித்திர கவிஞர்க்குளு சிதப்ரபல்ய

சற்குண மகத்து வமிகும்

தணிகைவளர் கந்தப்ப தேசிக னளித்திடுஞ்

சரவ ணப்பெரு மாளெனும்

மிக்கபுலவ னுமிங்ஙனம் உரைவ குத்தனன்

மிகுசோ திடங்க ளாலும்,

வித்தக வறப்பளீச் சுரசதக முதலான

வேறுபல நூல்க ளாலும்,

மேலான பொருளிதென வேயுணர்க, வேறுசில

வீணர்பொருள் வேறு பகர்வார்

மெய்மையைப் பற்றிவள் ளுவர்சொன்மூன் றாங்குறள்

விளங்கிலார் போலு மன்றே.

## தமது ஆசிரியர்
## நல்லூர் ம. சரவணமுத்து முதலியார் பேரிற் கூறிய
## இரங்கற்பாக்கள்
### 1845
### முப்பத்தாறு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

சீரேறு சகவருட மாயிரத் தெழுநூறு
சேரு மறுபத் தேழினிற்
திகழ்விசு வாவசெனும் வருடமதின் மகரமதி
திகழு நாலாந் தேதியிற்
திருவளர் பொன் வாரமக நாளபர பக்கநிகழ்
திருதி யையெனுந் திதியினிற்
செறியுமா யுட்கம்ப யோகவணி கலகரண
தினகும்ப லக்கி னத்தே
தென்னிலங் காபுரியி னுக்குள்வளர் யாழ்ப்பாண
தேசமுழு துஞ்சி றக்கத்
தெய்வசர வணபவசண் முககுமர குருபரன்
திகழ்நல்லை யமர்சி ரேஷ்டன்.

பேரேறு மிப்பூ தலஞ்சிறி தெனும்படி
பெரும்புகழ் படைத்த மகிபன்
பெருமை பொறை யறிவொடருண் முதலியநற் குணமொடு
பிறந்துடன் வளர்ந்த நிபுணன்.
பீடேறு மாணவக ரகவிரு டூரத்திப்
பிறங்கு கர்ப்பூர தீபம்,
பிரதாப மிகுமாதை நகர்மனப் புலிமுதலி
பெறவரு சபாரஞ் சிதம்
பேசருமி லக்கணவி லக்கியக் கடலுண்டு
பெரிதுதேக் கெறியு மேகம்.

பேதையே னெஞ்சக மெனுஞ்சிலையின் மீதுமலர்
பெருமித விகசித கமலம்.

காரேறு மிமையவர்கள் பதியனைய உயர்பிரபு
கட்குவந ரத்ந மகுடம்,
கடவுளர்த மமுதநிக ரதிமதுர முத்தமிழ்க்
கவிம தம்பொழி குஞ்சரம்,
காதன்மிகு கலைவாண ரிதயமண் டபமீது
கவினர சிருக்கு நிதியம்,
கனவெழில்கொண் மகனுமதி சயமுறு சவுந்தரிய
கனகவிக் கிரக சொருபம்,
கருதலர்க ளெனமருவு கவிஞர்கிடு கிடெனவெழு
கழகப்ர சங்க சிங்கம்,
கருதுவே தாத்தசித் தாந்தசம ரசசிந்தை
கைவந்த கருணா கரம்.

சாரேறு பசுபாச பதிலக்ஷ ணப்ரபல
சைவா கமப்பொக் கிஷம்,
தத்யப்ர காச சர வணமுத்து முதலியாந்
தன்னிகரி லாத குரவன்,
சாசுவத நிர்மல வியோமவிசு வாதீத
சத்திய நிராலம் பமாய்ச்
சர்வபரி பூரண வகண்டதத் துவமாய்ச்
சராசர வணுக் கடந்த
சச்சிதா னந்தபர நிஷ்களா னந்தமாய்ச்
சதுமறையின் முடிவி னிலகுந்
தற்பரசு காரம்ப சுத்தசிவ னாருபய
சரணமலர் மேவி னானே.

# நாவலர் மாணவரும் அவருடைய வித்தியாசாலை உபாத்தியாயருள் ஒருவருமாகிய வி.சுப்பிரமணியபிள்ளை பேரிற் கூறிய இரங்கற்பாக்கள்

## 1873

## கொச்சகம்

என்னுடைய கண்மணியே! எனதன்பர் சிகாமணியே!
பின்னமறு புகழ்பொலிசுப் பிரமணியப் பெருந்தகைநீ
என்னையுனக் கன்னைபிதா வினியகுரு வென்றுமுன்னர்ச்
சொன்னதென்னை பின்னரென்னைத் துறந்ததென்னை சொல்லாயே.

புன்புலா லுண்ணாமை போலறமற் றொன்றுமிலை
என்பதுபல் லோரறிய இயம்பியவர் தமைத்திருத்து
நின்பெருமை செவிமடுப்பச் செவிமடுப்ப நின்பெருமை
என்பெருமை யென்றுகந்தே னினியாது செய்வேனே?

சிவநெறியி னன்புடையார் போனடித்துஞ் சிவதீக்கை
அவநெறியென் நிகழ்ந்தொழியும் அந்தணரைப் பொருட்படுத்தும்
பவநெறிசா ராதுசிவ பத்தரையே பொருட்படுத்துந்
தவநெறிநின் னெறியிதுவென் றனைநிற்பாற் பிணித்ததுவே.

வேதனந்தான் கிடைத்திடினுங் கிடையாது வீடினுநிற்கோர்
மாதனமென் கருணையென மதித்தெனது கழகமமர்ந்(து)
ஏதமகல் பணிவழுவா தியற்றியவென் னிருநிதியே!
நாதனது பொறாதுநினை நணுகுவித்தான் தனதுலகே.

உன்னோடிரா மேச்சுரநன் கோதுதிருச் சீரலைவாய்
முன்னையபஃ றலங்களுக்கும் முழுத்தொண்டு புரிந்துகொண்டுன்
பின்னர்வரும் பெரும்பேறு பெறுவேனென் றெனக்குரைத்த
நின்னையிழந் தேனந்தோ! அந்தோ! விந் நீணிலத்தே.

இப்பதியிற் சிவகதைக ளெந்நாளும் படித்திடவும்,
செப்பெருமெய்த் திருத்தொண்டர் குருபூசை செய்திடவும்,
ஒப்பரிய திருமடமொன் றுண்டாக்கல் வேண்டுமென
எப்பொழுதும் புலம்பினையே யினியெங்ஙன் முற்றுவதே.

என்னிடத்து நெடுங்கால நேரேகற் றெத்தனையோ
நன்மையெலாம் பெற்றபலர் நாடறியப் பகைத்தகன்ற
வன்மைமனத் தினராக மதித்தென்சொல் வழியொழுகு
நின்னையிழந் துயிர்வாழவேன் நெஞ்சமிக வலியேனே.

இருநிலத்தோர் கோபியென வெடுத்துரைக்கு மென்சினத்துக்
கொருபொழுது மிலக்காகா தொழுகியென துளமுழுதும்
உருகியகா தலிற்கொள்ளை கொண்டதெனத் துறவினற்சீர்
பெருகியசுப் பிரமணியப் பெருந்தகையோய் நீயன்றே.

எத்தனையோ துயருழந்து மெமதிறைவன் றனைச்சிறிதுஞ்
சித்தமதி னோவாது திருநாம முச்சரித்துப்
பத்தியுட னவனருட்பாப் படித்திடக்கேட் டினிதுகந்த
இத்தகைய நினதுசெயல் யான்மறக்கற் பாலதன்றே.

ஐந்தெழுத்துப் பிரமாங்க மணிமிருத்துஞ் சயபதமாம்
மந்திரங்கோ ளறுபதிகம் மாசறுநீற் றுப்பதிகம்
பந்தமறு முருகாற்றுப் படையினியான் மந்திரித்த
முந்துதிரு நீறுதினம் முப்பொழுதும் பெற்றனையே.

பொருவாநின் னுடறீண்டிப் பூதியையா னணிபொழுது
திருநீறே அருமருந்து, திருநீறே அருமருந்தென்(று)
ஒருவாத பேரன்போ டுரைத்திடுநன் மதுரமொழி
பெருகார்வத் தினிக்கேட்கப் பெறுவேனோ பேசாயே.

பிறரிடத்துச் செல்லாவெம் பெருமானார் தமியேன்மாட்(டு)
உறவினெழுந் தருளல்கண்டோ ருளைந்துபுறம் பழிப்பரென
அறனினைந்து புலம்பியமெய் யன்பவினிப் பிழைத்திடினப்
புறவுரைகேட் பரிதென்றோ புவியினைவிட் டேகினையே.

என்பொருட்டென் னாசிரியன் எத்தனையோ பாடுபட
முன்செய்தவ மென்கொலியான் முடித்துழியு மறுமையவன்
பொன் செய்திரு வடித்தொண்டு புரிவனென நுமர்க்குரைத்த
நின்சொல்லுச் செவிமடுப்ப நெடிதெனுள நெக்கதுவே.

நிருவாண தீக்கைபெறீஇ நிகழ்சிவசித் தாந்தநூல்
பெருகார்வத் தென்னுழைநீ பெறுங்காதல் காட்டினையே
முருகார்சுப் பிரமணிய முன்னமது முற்றவினி
வருவாயோ? என்னுழைநீ வாராயோ? அறிகிலனே.

உன்பாத மிகவருந்த வொருசிறியேன் மனைக்கணியான்
இன்பார இருபொழுதும் எழுந்தருள்வ தென்னையெனத்
துன்பார நெருனலினீ சொற்றனையின் றென்மீதின்
அன்பாலோ? யான்வருந்தா தரனுலகம் அடைந்தனையே.

நின்றிரிபுண் டரநுதலும், நின்குறுநன் னகைமுகமும்,
நின்றணிந்த கவினடையும், நின்கைபுதைத் திடுவாயும்,
நின்றனொதுக் கியகலையும், நின்பணிந்த இன்மொழியும்,
என்றனெதி ரினியெந்தா ளெய்திடயான் பெறுவேனே.

நினதுள்ளம் சிவார்ச்சனையின் நேசமுடைத் தென்பதறிந்(து)
எனதுசிவ பூசையொடும் எனதன்ப! நின்பொருட்டு
மனவிருப்பிற் சிவலிங்க மற்றொன்று பூசிப்ப
உனதுடலம் ஒருவியர னுலகடையப் பெற்றனையே.

யான்பிழைத்தல் வேண்டுமென்ப தெனதைய! நின்விருப்பே
யான்பிழையா தேமரிக்கின் என்கிரியை அனைத்தையுநீ
தான்பிழையா தியற்றுவிக்க வென்றுமொழிந் தனையவ்வா(று)
யான்பிழையா தியற்றுவிக்க யார்கருத்து முடிந்ததுவே.

இக்காலத் தென்னாசான் ஈண்டிருப்ப யானிறக்கின்
நற்காலம் என்காலம் நாடிதைவிட் டவனகலும்
பிற்காலத் தியானிறக்கிற் பிழையெனநின் மருகனுக்கு
முற்காலத் தியம்பினையே நின்கருத்து முற்றியதே.

நின்செனன நாளிதனி னின்பெயரால் வேளூர்க்கும்
பொன்செய்திரு மன்றினுக்கும் பூசைநிகழ்ந் திடவீண்டுன்
கொன்செயுட லொருவியிறை குஞ்சிதபா தம்பொருந்த
என்செய்தவ மென்செய்தவ மிதுசால வியப்புடைத்தே.

*முற்றும்*



இக் கவித்திரட்டில் வரும் பாக்கள் யாவும் சொற்சுவை பொருட்சுவை நிறைந்து நாவலரது வடமொழி தென்மொழிப் பெருநாலுணர்ச்சியையும் பேரறிவின் மாட்சியையும் நன்கு புலப்படுத்துகின்றன. நாவலர் கீர்த்தனங்கள் பாடுவதில் மிகவும் திறமை படைத்தவர் என்பதனை அவர் கதிர்காம சுவாமி பேரிற் பாடிய ஆறு கீர்த்தனங்களும் காட்டும். அவை அற்புதமான பக்திப் பாடல்களாக மிளிர்கின்றன. அவருடைய பாடல்களுள் அனைத்தழகும் பொருந்தியது அவருடைய பாடசாலை ஆசிரியருள் ஒருவராகிய வி. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் மீது பாடப்பட்ட இரங்கற் பாக்கள் ஓசையும் உணர்ச்சியும் ததும்பும் இப்பாடல்களில் நாவலருடைய கவித்துவம் கரை புரண்டு ஓடுவதைக் காணலாம்.

Printed by Kumaran Press (Pvt) Ltd. 0112 364550